# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH

O.S.No.2/2017

Deposition of witness for DW1

| | | |
|---|---|---|
| Name | : | முருகையா |
| Father's Name | : | சுப்பிரமணியத்தேவர் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 66 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 15.06.2026.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 16.06.1912 தேதியில் ஆதி பாத்தியஸ்தர் மிராசு சுப்பிரமணிய தேவரும், மேற்படியாரின் 5 குமாரர்களும் மற்றும் பேரன் மா.முத்துச்சாமியும் பிறப்பித்துக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் சார்பதிவாளர் நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 14.03.1956 தேதியில் மிராசு சுப்பிரமணியத்தேவரின் குமாரரான முத்துவீரத்தேவர் 1ம் பிரதிவாதியின் சகோதரருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. உத்தேச வரைபடம் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 1 முதல் 3 பிரதிவாதிகளின் குடும்ப கொடி வழி பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 28.03.2012 தேதியில் 1ம் பிரதிவாதி பாதுகாப்பு வேண்டி அச்சன்புதூர் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு கைநகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. வீட்டுத் தீர்வை ரசீதுகள் (எண்ணம்-22) அசல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. மின்கட்டண ரசீது அசல் (எண்ணம்-1) பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. குடிநீர்கட்டண ரசீதுகள் (எண்ணம்-4) அசல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. இடைகால் சார்பதிவாளர் அவர்கள் வழங்கிய வழிகாட்டி மதிப்பு சான்றிதழ் பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பி.வா.சா.ஆ.3 முதல் 5 ஆவணங்கள் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆட்சேபனை இறுதிவிசாரணையின்போது பரிசீலனை செய்யப்படும்

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**